**பாரத் நிர்மாண் கருத்தொளி இயக்க நிகழ்ச்சிகள்**

First Published : 20 Dec 2011 03:11:33 PM IST

நாகர்கோவில், டிச. 19: அகஸ்தீசுவரம் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட பல்வேறு கிராமங்களில் பாரத் நிர்மாண் கருத்தொளி இயக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அகஸ்தீசுவரம் ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட கரும்பத்தூர், பஞ்சலிங்கபுரம், கோதைகிராமம் உள்ளிட்ட கிராமங்களில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வுத் திரைப்படங்களும், மத்திய அரசின் நாடகப் பிரிவின்கீழ் இயங்கும் தாராபுரம் கலாராணி கலைக்குழு மூலம் விளம்பர நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சம்பந்தப்பட்ட கிராமத்தின் தலைவர்கள் பாலமுருகன், கண்ணன், வாசுகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சிகளுக்கு, திருநெல்வேலி கள விளம்பர அலுவலர் ஸ்மிதி ஏற்பாடு செய்திருந்தார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்**

First Published : 20 Dec 2011 02:42:19 PM IST

அரியலூர், டிச. 19: அரியலூர் மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் திங்கள்கிழமை வழங்கப்பட்டன.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேளாண் பொறியியல் துறை மூலம் இந்தத் திட்டத்தின் கீழ், 10 விவசாயிகளுக்கு தலா ரூ. 1,36,828 மதிப்புள்ள பவர் டில்லர்களை தலா ரூ. 45 ஆயிரம் என்ற மானிய விலையிலும், ஒரு விவசாயிக்கு ரூ. 3,43,775 மதிப்புள்ள கதிரடிக்கும் இயந்திரத்தை ரூ. 1.50 லட்சம் என்ற மானிய விலையிலும், மற்றொரு விவசாயிக்கு ரூ. 98,401 மதிப்புள்ள கோமதி ரோட்டோவேட்டர் இயந்திரத்தை ரூ. 20 ஆயிரம் என்ற மானிய விலையிலும் என மொத்தம் 12 விவசாயிகளுக்கு 18,10,456 மதிப்புள்ள வேளாண் கருவிகளை ரூ. 6,20,000 என்ற மானிய விலையில் மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ் வழங்கினார்.

பின்னர் அவர் கூறியது:

விவசாயிகள் நவீன வகைக் கருவிகளைப் பயன்படுத்தி, சாகுபடி செலவுகளைக் குறைத்து, அதிக மகசூலைப் பெறுவதுடன், நாட்டின் முன்னேற்றத்துக்கும் உதவ வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறையைச் சேர்ந்த செயற்பொறியாளர்கள் மணி, உதவிச் செயற்பொறியாளர்கள் அரியலூர் மோகனகிருஷ்ணன், ஜயங்கொண்டம் அண்ணாதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2011,00:00 IST

**காசினிக்கீரை**: உலகளவில் குளிர்ச்சியான மலைப்பிரதேசங்களில் அதிகம் பயிரிடப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கு குளிர்ச்சியான தட்பவெப்பநிலை மிக அவசியமாகும். கொடைக்கானல், ஏற்காடு, சேர்வராயன் மலைப்பகுதிகளில் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது. நல்ல குளிர்ச்சியான தோப்பு பகுதிகளிலும் பயிர் செய்யலாம். காசினிக்கீரையின் தாவரவியல் பெயர் சிக்கோரியம் இன்டைபன் என்பதாகும். இது ஆஸ்டிரேசியே குடும்பத்தைச் சேர்ந்தது. சிக்கரி பொதுவாக காப்பியின் சுவையைக் கூட்டுவதற்கு அதிகளவு பயன்படுகிறது. கசாயமானது கருமையான கசப்பு சுவையோடு இருக்கும். இதனை உட்கொள்வதால் உணவுப் பாதைக்கு நன்மை பயக்கும். காசினியிலுள்ள பிரிபையாரிக் பொருட்களான?இனுவின், ஒலிகோ, பிரக்டோஸ் ஆகியவை இயற்கையான நார்ச்சத்துக்களாக கருதப்படுகின்றன. உணவு செரித்தலை அதிகரிக்கச் செய்கிறது. நோய்களை உண்டாக்கும் நுண்ணுயிரிகளை அழிக்கின்றது. தீங்கிழைக்கும் கொழுப்பு சக்தியை குறைத்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. பொதுவாக காசினி செடிகள் விதைகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யப்படுகின்றன. ஒரு எக்டருக்கு 3-5 கிலோ விதை தேவைப்படும். செடிகள் விதைத்த ஒரு வாரத்தில் முளைத்துவிடும். 15-20 நாள் வயதுடைய நாற்றுகள் நடவிற்கு பயன்படுத்தப்படுகின்றன. பார்கள் அமைத்து பக்கவாட்டில் நடவேண்டும். வரிசைக்கு வரிசை 38செ.மீ. இடைவெளியும் செடிக்குச் செடி 30 செ.மீ. இடைவெளியும் கொடுக்க வேண்டும்.

**அறுவடை**: வேர்கள் நன்கு முதிர்ச்சி அடைந்த பின்பே அறுவடை செய்ய வேண்டும். பொதுவாக நடவு செய்த 123 நாட்களில் அறுவடை செய்யலாம். வேர்ப்பாகம் முதலில் நன்றாக கழுவப்பட்டு துண்டு துண்டுகளாக நறுக்கப்பட்டு 13 சதம் ஈரப்பதத்தில் உலர்த்தப்படுகிறது. காசினி வேர்ப்பாகத்தில் 72 சதம் நீரும், 25-28 சதம் நைட்ரஜன் அல்லாத திடப் பொருட்களும், 15 சதம் புரதமும், 0.38 சதம் கொழுப்பும், 1.4 சதம் லேஷ்லோஸ், 7.8 சதம் இன்சுலின் மற்றும் மிகக் குறைவான இண்டிவின் உள்ளது.
சிக்கோன் அளவு அடர்த்தி வேரின் தரத்தைப் பொறுத்தே அமையும். அறுவடையைத் தொடர்ந்து வேர்களை 0.20 செல்சியஸ் வெப்பநிலை மற்றும் 95-98 சதவீதம் ஈரப்பதமுள்ள குளிர்சாதன அறைகளில் 2 வாரங்கள் வைத்திருக்க வேண்டும். அறுவடை செய்தபின் 2 வாரங்களுக்கு 1 செல்சியஸ் வெப்பநிலையில் சேமித்து வைக்க வேண்டும். இதன்மூலம் தரமான சிக்கோன்களைப் பெறலாம். (**தகவல்**: முனைவர் பொ.பாலசுப்பிரமணி, முனைவர் அ.ராமன், பா.பானுபிரியா, தோட்டக் கலைத்துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104. 94860 86267)

**வில்வம்பழம்**: மருத்துவ குணமுள்ள இம்மரத்தின் இலைகள் சிவ வழிபாட்டில் முக்கியமானதாக திகழ்கின்றன. இம்மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய், பிஞ்சு, பழம் அனைத்தும் மருத்துவ குணம் நிறைந்ததாக உள்ளன.
வில்வம் பழத்தின் சுவையும் வழுவழுப்பும் மற்ற பழங்களைப்போல் நேரடியாக உட்கொள்ள முடிவதில்லை. எனவே இலை, பழங்களைப் பயன்படுத்தி, பல மதிப்பூட்டிய பொருட்களைத் தயாரிக்கும் முறைகள் ஆய்வின் மூலம் கண்டறியப் பட்டு வருகின்றன.
பழத்தைப் பயன்படுத்தி உடனடி உணவு வகைகளான "கேன்டி', ஸ்குவாஷ், வில்வ பழ பார், மிட்டாய், ஜாம், முரபா, சிறு தானிய பார், சத்துமாவு, வில்வ பழ மிக்ஸ், நூடுல்ஸ், வில்வ இலையைப் பயன்படுத்தி கோதுமை ரொட்டி, மிக்ஸ், அரிசி ரொட்டி மிக்ஸ், பலதானிய ரொட்டி மிக்ஸ், வில்வ இலை சூப் மிக்ஸ் போன்ற உணவு வகைகளைத் தொழில் ரீதியாக செய்வதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
வில்வ இலை, பழத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உணவுகள் நுகர்வோருக்கு ஏற்ற வகையில் குறிப்பாக எல்லா வயதினரும் விரும்பி உட்கொள்ளும் வகையில் தொழில் ரீதியாகச் செய்ய விரும்புபவர்களுக்கு மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உணவு பதப்படுத்தும் மையத்தில் பயிற்சி அளிக்கப் படுகிறது. பயிற்சி பெற்ற நபர்கள் பதப்படுத்தும் மையத்தில் உள்ள கருவிகளைப் பயன்படுத்தி அதிக அளவில் உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம். **தொடர்புக்கு**: முனைவர் சி.பார்வதி, பேராசிரியர் மற்றும் தலைவர், மனையியல் விரிவாக்கத்துறை, மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104. போன்:

0452-242 4684, 94422 19710.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**கார்த்திகைப் பட்டத்தில் கரிசல் மண்ணில் சூரியகாந்தி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2011,00:00 IST



ஐப்பசி மழை முடிந்து கார்த்திகைப் பட்டத்தில் கரிசல் நிலங்களில் மணிலாவிற்குப் பதில் சூரியகாந்தி பயிரைப் பாசனம் கொடுத்து சாகுபடி செய்யலாம். சூரியகாந்தி சாகுபடி மணிலா சாகுபடியைவிடச்சுலபமானது. சூரியகாந்தி பயிரின் வயது 80-85 நாட்கள்தான். மணிலாவின் வயதை விடக்குறைவு. இக்கட்டுரையில் சூரிய காந்தியின் சாகுபடி முறைகள், பொருளாதாரம் போன்றவைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

**சாகுபடி முறைகள்**: கார்த்திகை சாகுபடிக்கு ஏற்ற ரகங்கள் அட்வான்ஸ் கார்கில், கே.பி.எஸ்.எச்.1, மாடர்ன் மற்றும் கோ.3 போன்றவை. விவசாயிகள் தங்கள் பகுதியில் வேறு ரகங்கள் அதாவது (கார்த்திகைப் பட்டத்திற்கு சாகுபடி செய்வதற்கு ஏற்றது) கிடைத்தால் அவை களையும் சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதை தேவைப்படும். நீண்டகால விதை ரகங்களை 60க்கு 15 செ.மீ. இடைவெளியிலும் குறுகிய கால விதை ரகங்களை 30க்கு 15 செ.மீ. இடைவெளியிலும் விதைக்க வேண்டும். விதை முளைப்பு சீராக இருப்பதற்கு தண்ணீரில் ஊறவைத்து பின் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

நீண்டகால ரகமாக இருந்தால் சதுரமீட்டரில் 12 செடிகளும், குறுகிய கால ரகமாக?இருந்தால் சதுரமீட்டரில் 24 செடிகளும் இருக்கும்படி கவனித்துக்கொள்ள வேண்டும். விதைமூலம் பரவும் சாம்பல்நோய், இலைப்புள்ளி நோய் இவைகள் முளைத்து வரும் இளஞ்செடிகளை பாதிக்காமல் கவனித்துக்கொள்ள வேண்டும். இதற்கு விதைநேர்த்தி செய்ய வேண்டும். அதாவது ஒரு கிலோ விதையுடன் 42 கிராம் திரம் என்னும் மருந்தைக் கலந்து விதைக்க வேண்டும்.

**எரு, உரமிடுதல்**: சூரியகாந்தி பயிருக்கு இயற்கை உரம் தவறாமல் இடவேண்டும். ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டிகள் நன்கு மக்கிய தொழு உரம் இட்டு நிலத்தைப் பண்பட உழவேண்டும். தொழு உரத்தோடு உயிர் உரமாகிய அசோஸ்பைரில்லத்தையும் கலந்து இடவேண்டும். 10 கிலோ தொழு உரம், 10 கிலோ மண் இவற்றுடன் 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தையும் கலந்து வயலில் சீராகத் தூவவேண்டும். ஏக்கருக்கு அடி உரமாக தழைச்சத்து 8 கிலோ, மணிச்சத்து 8 கிலோ, சாம்பல்சத்து 8 கிலோ ஆகியவைகள் கிடைப்பதற்கு ஏற்ற ரசாயன உரங்களை இடவேண்டும். இதற்கு 18 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் மற்றும் 14 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இடவேண்டும். கடைசியாக 5 கிலோ நுண்ணூட்டச் சத்துக்களை 15 கிலோ ஆற்று மணலுடன் கலந்து ஏக்கர் பரப்பில் சீராகத் தூவவேண்டும்.

**விதைத்தல்**: விதையுடன் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தைக் கலந்து விதைக்கலாம். விதைக்கும் நிலத்தில் விதையை உளுந்து தெளிப்பது போல் தெளித்து விதையை மண்ணால் மூடி, பின் பாத்திகட்டி பாசனம் செய்து சதுரமீட்டரில் ரகங்களுக்குத் தக்கவாறு 12 அல்லது 24 செடிகள் உள்ளபடி செய்து அதிகமாக இருக்கும் செடிகளைக் களைந்துவிடலாம். இல்லையேல் பாருக்கு பார் 60 அல்லது 30 செ.மீ. உள்ளபடி அமைத்துக்கொண்டு விதையை பாருக்கு பக்கவாட்டில் 15 செ.மீ. இடைவெளியில் ஊன்றலாம். 10வது நாளில் நன்கு வளர்ந்த ஒரு செடியை விட்டு வைத்து மற்ற செடிகளைக் களையெடுக்க வேண்டும்.

**களை, மேலுரம்**: சூரியகாந்தி பயிருக்கு ஒருமுறை களையெடுத்து நிலத்தைக் கொத்திவிட்டு பின் மீதமுள்ள தழைச் சத்தாகிய 18 கிலோ அளவை மேலுரமாக இடவேண்டும். இதற்கு 18 கிலோ யூரியா இடவேண்டும். செடிகள் நன்கு வளர்ந்து பூமியில் நிழல் விழும்போது களை முளைக்காது. இதனால் இரண்டாவது களை க்ஷயெடுக்க வேண்டிய அவசியம் இருக்காது.

**பாசனம்**: சூரியகாந்திக்கு பாசன மேலாண்மையை சரியாகச் செய்தால் நல்ல மகசூல் கிட்டும். கீழ்க்கண்ட ஆறு கட்டங்களில் பாசனம் தவறாமல் கொடுக்க வேண்டும். விதை விதைப்பதற்கு முன், விதைத்த நான்காம் நாள் உயிர்த்தண்ணீர், விதைத்த 20ம் நாள், 35ம் நாள், 40ம் நாள், 60ம் நாள், 20-25வது நாள் மொட்டுகள் உருவாகும் சமயம், 30-45வது நாள் பூக்கள் மலரும்போது, 50-60வது நாள் விதை முற்றும் சமயம், மண்ணில் ஈரம் இருக்கும்படியாக நீர்பாய்ச்ச வேண்டும். நிலத்தில் நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். அறுவடைக்கு ஒரு வாரம் முன் பாசனத்தை முற்றிலும் நிறுத்திவிட வேண்டும்.

**பயிர் ஊக்கி தெளித்தல்**: விதைத்த 30வது நாள் ஏக்கருக்கு 111 மில்லி பிளானோபிக்ஸ் பயிர் ஊக்கியை 250 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இது பூக்களில் அதிக விதை பிடிக்க உதவுகின்றது.

**பூக்களைத் தடவுதல்**: சூரியகாந்தியில் அயல் மகரந்த சேர்க்கையை ஏற்படுத்தி அதிக விதை உற்பத்தி செய்யலாம். இதற்கு பூ மலர்ந்தபிறகு காலை 9 மணியில் இருந்து 11 மணிக்குள் தொடர்ந்து 10 நாட்களுக்கு மற்றொரு பூவுடன் உரசும்படி செய்ய வேண்டும்.

பயிர் பாதுகாப்பு: இலை தின்னும் புழுக்கள், வண்டுகள், பூ அழுகல் நோய், துரு நோய் இவற்றை கட்டுப்படுத்திட ஏக்கருக்கு 250 மில்லி எண்டோசல்பான், 500 கிராம் டைத்தேன் எம்.45 இவற்றை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். பூக்களில் விதைகள் முதிர்ச்சி அடையும் போது பச்சைக்கிளிகள் பூக் கொண்டைகளை அலகால் கொத்தி கடும் சேதத்தை உண்டாக்கும். டப்பாக்களைத் தட்டி சத்தம் எழுப்பி கிளிகளைத் துரத்த வேண்டும்.

**அறுவடை**: சூரியகாந்திப் பூக்களின் அடி பாகம் மஞ்சள் நிறமாக மாறிய உடன் பூக்களை அறுவடை செய்து களத்துமேட்டில் காயப்போட வேண்டும். பூக்கள் சரியாக காயாமல் இருக்கும்போது கோணிச்சாக்கில் சேமித்தால் அவற்றில் பூசனம் வளர்ந்து நஷ்டம் ஏற்படும். களத்துமேட்டில் அடிக்கடி பூக்களைக் கிளறவிட்டு நன்கு காயப்போடவேண்டும். நன்கு உலர்ந்த பூக்களை தடியால் அடித்து விதையைப் பிரித்து அவற்றை சுத்தம் செய்து விற்பனை செய்துவிடலாம்.

**பொருளாதாரம்**: கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை நன்கு கவனித்து அனுசரித்தோமானால் ஏக்கரில் சுமார் 1000 கிலோ வரை மகசூலாகப் பெறமுடியும். சூரியகாந்தியை திருவண்ணாமலையில் உள்ள டான்காப் நிறுவனம் நல்ல விலைக்கு வாங்கிக்கொள்ளும். மேலும் சேலத்தைச் சேர்ந்த செவ்வாய்பேட்டையில் உள்ள வியாபாரிகளுக்கும் சூரியகாந்தியை விற்க முடியும். விவசாயிகள் தங்கள் மதிநுட்பத்தை பயன்படுத்தி சரக்கினை விற்பனை செய்து கணிசமான அளவு லாபம் எடுக்க முடியும். சிறந்த விவசாயிகள் ஏக்கரில் ரூ.10,000 வரை லாபம் எடுக்கிறார்கள்.-எஸ்.எஸ்.நாகராஜன்.

**50 சதவீத மானியத்தில் விதைகள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2011,02:11 IST

கருத்தை பதிவு செய்ய

கோத்தகிரி : கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் முட்டைகோஸ் விதைகள் வினியோகிக்கப்படுகிறது. கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோத்தகிரி தோட்டக்கலைத் துறையின் மூலம், மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நீர்போகம் மற்றும் கார்போகத்தில் நடவு செய்யவுள்ள விவசாயிகளுக்கு, 50 சதவீத மானிய விலையில் குயிசர், டெக்கிலா ரகங்களான முட்டைகோஸ் விதைகள் தற்போது வினியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் செளிப்பு நீர், சொட்டுநீர் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது.

எனவே, தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டங்களில் பங்கேற்று விவசாயிகள் பயன்பெறலாம். இவ்வாறு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

**துறையூர் அருகே மண்புழு உற்பத்தி பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2011,03:13 IST

கருத்தை பதிவு செய்ய

துறையூர்: துறையூர் அருகே கண்ணனூரில் தமிழக அரசின் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கான மண்புழு உற்பத்தி குறித்து பயிற்சி நடந்தது. துறையூர் வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகரன் பயிற்சியை துவக்கி வைத்து, ""விவசாயிகள் இயற்கை வேளாண்மையின் மூலமாகவே நீடித்த நிலையான பயிர் விளைச்சலை பெற முடியும். அதற்கு மிகவும் இன்றியமையாதது மண்புழு உரம் மட்டுமே. அந்த மண்புழு உரத்த அனைத்து விவசாயிகளும் சிறிய அளவிலாவது செய்து வயலில் இட்டு அதிக மகசூல் கிடைப்பதோடு நில வளமும் காக்கப்படுகிறது. வேளாண்துறை நடப்பாண்டில் மண்புழு உர உற்பத்தி செய்யும் யூனிட் அமைத்திட 2.70 லட்சம் ரூபாய் மான்யமாக ஒன்பது யூனிட்டுக்கு வழங்குகிறது,'' என்று பேசினார். இப்பயிற்சிறியில் முன்னோடி மண்புழு விவசாயி தங்கராஜ், மண்புழு உரம் தயாரிக்கும் முறைகளையும் அதில் தான் பெற்ற பலன்கள் பற்றி விளக்கினார். விவசாயி கோனாயி வயலில் அரசு மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள மண்புழு உர உற்பத்தி மையத்தில், மண்புழு உரம் தயாரிக்கும் முறைகள் பற்றி விவசாயிகளுக்கு செயல்விளக்கமாக உதவி வேளாண் அலுவலர்கள் தர்மலிங்கம், ஜான்ஜெயக்குமார் செய்து காட்டினர். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் செல்வம், துணை வேளாண் அலுவலர் பிரபாகரன், உதவி அலுவலர்கள் சம்பத், செல்வக்குமார் செய்திருந்தனர்.

**இலவச டூர், வயல் விழா பண்ணை பள்ளிகள் அமைக்க அரசு ரூ.37 லட்சம் ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 21,2011,01:45 IST

கருத்தை பதிவு செய்ய

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளை இலவச டூர் அழைத்து செல்லவும், செயல்விளக்க திடல் அமைத்தல், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள நடப்பாண்டிற்கு 37 லட்ச ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை தொழில் நுட்ப முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண்மையில் லேட்டஸ்ட் தொழில் நுட்பம் குறித்து பயிற்சி அளித்தல், பல்வேறு இடங்களில் இயற்கை உரங்கள் மூலம்

நடக்கும் விவசாயத்தை காண்பித்து அந்த நடைமுறையை விவசாயிகளை பின்பற்ற செய்ய அவர்களை டூர் அழைத்து செல்லவும் தமிழக அரசு வேளாண்மைத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக தமிழகத்தில் அனைத்து மாவட்டத்திற்கும் கோடிக்கணக்கான ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேளாண்மைத்துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்திற்கு இதற்காக 36 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் வேளாண்மைத்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆளுமைக்குழு கூட்டம் நடந்தது. கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனசிங்டேவிட், வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சிக்கு இம் மாவட்டத்தில் உள்ள 12 வட்டார பகுதிகளான புதுக்கோட்டை, திருச்செந்தூர், தென்திருப்பேரை, உடன்குடி, ஸ்ரீவைகுண்டம், செய்துங்கநல்லூர், சாத்தான்குளம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, கயத்தார், விளாத்திகுளம், புதூர், தூத்துக்குடி உழவர் பயிற்சி நிலையம் ஆகியவற்றிற்கு சேர்த்து 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.12 வட்டாரங்களில் மொத்தம் 110 செயல் விளக்க திடல் அமைக்க 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய், விவசாயிகளை மாநில அளவிலான சுற்றுலாவிற்கு அழைத்து செல்வதற்கு 12 வட்டாரத்திற்கு 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 30 ஆயிரம் ரூபாயும், ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்திற்கு மட்டும் 60 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள து.

பண்ணை தகவல்களை விவசாயிகளுக்கு பரவலாக்கும் வகையில் துண்டுபிரசுரம் அச்சடித்தல், போர்டுகள் வைத்தல் போன்ற பணிகளுக்கு 2 லட்சத்து 80 ஆயிரம், விவசாயிகளுக்கு புதிய வேளாண்மை தொழில் நுட்பங்களை அறிய செய்வதற்கு 2 லட்சம் ரூபாய், 12 வட்டார பகுதியில் வயல் விழாக்கள் நடத்திட 3 லட்சத்து 15 ஆயிரம், பண்ணை பள்ளிகள் அமைத்திட 8 லட்சத்து 19 ஆயிரம் மற்றும் சில திட்டங்களை செயல்படுத்த இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியினை விவசாயிகள் பயன் பெறும் வகையில் செயல்படுத்துமாறு கலெக்டர் ஆஷீஷ்குமார் வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

**மாற்றம் இல்லாத மாவட்டம் : சிவகங்கை விவசாயிகள் குமுறல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2011,22:06 IST

சிவகங்கை : கடந்த 50 ஆண்டுகளாக தொழில் மாற்றம் ஏதுவும் ஏற்படாமல் விவசாயத்தை மட்டுமே நம்பியும் பயனில்லையே என விவசாயிகள் குமுறுகின்றனர். சிவகங்கையில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடந்தது. இதில் பேசிய விவசாயிகள், சிவகங்கை மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழில். வேறு தொழிற்சாலைகள் இல்லை. கடந்த 50 ஆண்டுகளாக மாற்றம் இல்லாமல் அப்படியே உள்ளது. பிரதான தொழிலான விவசாய தொழிலை நம்பியுள்ள விவசாயிகளுக்கு கடன் தர அதிகாரிகள் மறுக்கின்றனர் என குமுறினர்.
விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாணிக்கம் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளை மாவட்ட நிர்வாகம் ஊக்குவிக்காததால், கடந்த ஆண்டு ஒரு லட்சம் எக்டேரில் நடவு செய்ய வேண்டிய நெல், 84,525 எக்டேரில் மட்டுமே பயிர் செய்ய முடிந்தது. எண்ணெய் வித்துகள் 9,400எக்டேருக்கு 5,400, பயறு வகைகள் 2,700க்கு 1,400 எக்டேர் மட்டுமே பயிர் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு 25 ஆயிரம் எக்டேரில் பயிரிடப்பட்டிருந்த நெல் மழை, நோய் தாக்குதலால் சேதமடைந்தது. என்றார். விவசாய சங்க மாவட்ட தலைவர் ஆதிமூலம் கூறியதாவது: விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் விவசாயிகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் என நம்பி வருகிறோம். விவசாயிகளுக்கு பரிகாரம்தான் கிடைக்கவில்லை என்றால் பதில் தெரிவிக்க கூட அதிகாரிகள் வருவதில்லை, என்றார்.

**மார்க்கெட்டில் தேவையான பொருள் : பயிரிட விவசாயிகளுக்கு யோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2011,22:06 IST

கருத்தை பதிவு செய்ய

சிவகங்கை : மாவட்ட நீர்வடிப்பகுதி குழு தலைவர்கள், வேளாண்மை,தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்த விளக்க கூட்டம் சிவகங்கையில் நடந்தது. கலெக்டர் ராஜாராமன் தலைமை வகித்து பேசியதாவது: ராஜஸ்தான், குஜராத் போன்ற மாநிலங்களில் நீரினை குறைவாக பயன்படுத்தி நெல், கரும்பு, உளுந்து போன்றவைளை அதிக அளவில் பயிர் செய்கின்றனர்.இங்கு வந்துள்ள விவசாயிகளையும் அம்மாநிலத்திற்கு அழைத்து சென்று குறைந்த நீரில் எவ்வாறு பயிர் செய்கின்றனர் என்பது குறித்து தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். நெல்லில் திருந்திய நெல் சாகுபடி திட்டம் விவசாயிகளிடம் நல்ல

வரவேற்பை பெற்றுள்ளது. அதுபோல் உளுந்து, கம்பு, கேழ்வரகு, குதிரைவாளி போன்றவற்றை நீர்வடி பகுதி விவசாயிகள் பயிரிட முன் வரவேண்டும். விவசாயிகள் ஒரே நேரத்தில் மாவட்டம் முழுவதும் ஒரே மாதிரியாக பயிரிடுகின்றனர். சந்தையில் எந்த பொருளுக்கு அதிக தேவை உள்ளது என்பதை தெரிந்து அத்தகைய பயிர்களை விவசாயம் செய்ய வேண்டும்,என்றார். வேளாண்மைத்துறை துணை இயக்குனர் பொன்காந்த பெருமாள், தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் இருளப்பன், உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) வெள்ளைச்சாமி கலந்து கொண்டனர்.

**தேவை மீன் பாசி ஏல வருவாய் : விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 20,2011,22:37 IST

கருத்தை பதிவு செய்ய

ராஜபாளையம் : பொதுப்பணித்துறை மூலம் மீன்பாசி ஏலம் விட்ட தொகையில், நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு நிதி வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். கண்மாய்கள் பொதுப்பணித்துறை மற்றும் ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த கண்மாய்களின் மீன்பாசி ஏல உரிமம் ஒன்றியங்கள் வசம் இருந்தன. பொதுப்பணித்துறைக்கோ, விவசாய சங்கங்களுக்கோ பயன் இல்லாமல் இருந்தன. தற்போது இந்த முறை மாற்றப்பட்டு, பொதுப்பணித்துறைக்கும் மீன் பாசி ஏல உரிமம் கொடுக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம் பொதுப்பணித்துறைக்கு கிடைக்கும் வருவாயை, நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். இந்த வருவாய் கண்மாய் பராமரிப்பு பணிகள் செய்ய வசதியாக இருக்கும் என விவசாயிகள் கருதுகின்றனர். இதை வலியுறுத்தி ராஜபாளையம்-தென்காசி ரோட்டில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு, கண்ணிநிறைந்தான் கண்மாய் விவசாய சங்க செயலாளர் சிவகாமிநாதன் தலைமை வகித்தார். பிரண்டைகுளம் கண்மாய் தலைவர் அய்யனார் முன்னிலை வகித்தார். கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். அய்யனார் கூறுகையில், ""கண்மாய் மீன் பாசி ஏலம் மூலம் வரும் வருவாயை, விவசாய சங்கங்களுக்கு வழங்க, திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பாடுகள் நடந்து உள்ளன. அது போல விருதுநகர் மாவட்டத்திலும் நடைபெற வலியுறுத்துகிறோம்," என்றார்.

அரிசி ஏற்றுமதி 3 மடங்கு உயரும்

பதிவு செய்த நாள் : 12/21/2011 12:28:03 AM



புதுடெல்லி : அரிசி ஏற்றுமதிக்கான தடையை விலக்கிக் கொண்டது, உற்பத்தி அதிகரிப்பு ஆகிய காரணங்களால், நடப்பு 2011&12 நிதியாண்டில் அரிசி ஏற்றுமதி 3 மடங்கு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை போதுமான அளவுக்கு பெய்ததால், உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 2011&12 நிதியாண்டில் நாட்டின் அரிசி உற்பத்தி 6 சதவீதம் அதிகரித்து 10 கோடி டன்னாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் புள்ளிவிவரப்படி கடந்த 2010&11 நிதியாண்டில் 9.5 கோடி டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது.

இதுகுறித்து, சர்வதேச கடன் தர நிர்ணய அமைப்பான கிரிசில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் அரிசி உற்பத்தி அதிகரித்திருப்பதால், ஏற்றுமதி 70 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது கடந்த நிதியாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட 22 லட்சம் டன்னைவிட 3 மடங்கு அதிகமாகும். இதன்மூலம், உலக நாடுகளின் மொத்த அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 21 சதவீதமாக அதிகரிக்கும். கடந்த நிதியாண்டில் இது 7 சதவீதமாக இருந்தது.

அதிக அளவில் அரிசி ஏற்றுமதி செய்யும் தாய்லாந்து, வியட்னாம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உற்பத்தி குறைந்திருப்பதும் இந்தியாவின் அரிசி ஏற்றுமதிக்கு மற்றொரு சாதகமான அம்சமாகும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Ôபாசுமதி அல்லாத மற்ற ரக அரிசி ஏற்றுமதிக்கு விதித்திருந்த தடையை கடந்த சில மாதங்களுக்கு முன்பு மத்திய அரசு விலக்கிக் கொண்டது. இந்நிலையில், அரிசி உற்பத்தி அதிகரித்திருப்பது ஏற்றுமதியாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. இதன்மூலம், கூடுதலாக ஸி10,600 கோடி ஏற்றுமதி வருமானம் கிடைக்கும்Õ என கிரிசில் இயக்குநர் குர்பிரீத் சத்வால் தெரிவித்தார்.

**அசோசேம் வலியுறுத்தல் விவசாய கடன் அளிப்பதில் சீர்திருத்தம் வேண்டும்**

பதிவு செய்த நாள் : 12/21/2011 12:27:01 AM



புதுடெல்லி : அசோசேம் அமைப்பு சர்வதேச சந்தை ஆய்வு நிறுவனமான எர்ன்ஸ்ட் அன்ட் யங் உடன் இணைந்து Ôடிரில்லியன் டாலர் எகானமி&ஆப்பர்சுனிட்டிஸ் அன்ட் சேலஞ்சஸ் பார் பாங்க்ஸ்Õ என்ற தலைப்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன் விவரம்: நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடித்தட்டு மக்களை சென்றடையவில்லை என்பதுதான் உண்மை. இதை உணர்ந்த மத்திய அரசு, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கை நிர்ணயித்துள்ளது.

கிராமங்களில் வங்கி கிளைகளை தொட ங்க உத்தரவிட்டுள்ளது. இத்துடன் விவசாய வளர்ச்சியையும் சேர்த்துக் கொண் டால் இலக்கை எட்டுவது சுலபமாக இருக்கும்.

நாடு முழுவதும் 14.8 கோடி குடும்பங்கள் கிராமங்களில் வசிக்கின்றன. இதில் 8.9 கோடி குடும்பங்கள் விவசாய தொழிலில் ஈடுபட்டுள்ளன. இவற்றில் 4.6 கோடி குடும்பங்கள் வங்கிகள் மூலம் விவசாயக் கடன்களை பெறுவதில்லை. எனவே, அனை த்து விவசாய குடும்பங்களுக்கும் கடன் கிடைக்கும் வகையில் புதிய கொள்கையை உருவாக்குவதுடன் கடன் நடைமுறைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

நடப்பு நிதி ஆண்டில், டிச.15 வரை மத்திய அரசு, ரூ.45,125 கோடி உணவு மானியம் வழங்கியது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டில், டிசம்பர் 15–ந் தேதி வரையிலான காலத்தில், மத்திய அரசு உணவு மானியமாக ரூ.45,125 கோடி வழங்கியுள்ளது. இது, இந்த நிதி ஆண்டிற்கான பட்ஜெட் இலக்கில் (ரூ.60,572 கோடி) 74.5 சதவீதமாகும்.

கடந்த 2009–10 மற்றும் 2010–11–ஆம் நிதி ஆண்டுகளில் மத்திய அரசின் உணவு மானியத் தொகை முறையே ரூ.58,242.45 கோடி மற்றும் ரூ.62,929.56 கோடியாக இருந்தது என நுகர்வோர் நலன் உணவு பொது விநியோக அமைச்சர் கே.வி.தாமஸ் தெரிவித்துள்ளார்.

பொது விநியோக முறை

ஏழை, எளிய மக்களை இலக்காகக் கொண்ட பொது விநியோக முறை மற்றும் இதர சமூக நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் உணவு தானியங்களின் விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலை, உணவு தானியங்களின் அடக்க விலையைக் காட்டிலும் குறைவாக இருப்பதால் மத்திய அரசு இதற்கு உணவு மானியம் வழங்குகிறது. இந்திய உணவு கழகம் மற்றும் பரவலான கொள்முதல் திட்டத்தின் கீழ் உணவு தானியங்களை கொள்முதல்

*செய்யும் மாநில அரசுகளுக்கு இந்த உணவு மானியம் வழங்கப்படுகிறது.*
*ஏழை மற்றும் எளிய மக்களை இலக்காகக் கொண்ட பொது விநியோகத் திட்டத்திற்கு, நடப்பு நிதி ஆண்டில் 4.89 கோடி டன் உணவு தானியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக கே.வி.தாமஸ் மேலும் தெரிவித்துள்ளார்.*
*உத்தரபிரதேசம்*
*மானிய விலையில் அதிக உணவு தானியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதில் (71.13 லட்சம் டன்) உத்தரபிதேச மாநிலம் முதலிடத்தில் உள்ளது. மொத்த உணவு தானியங்களில் இம்மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட அளவு 14.5 சதவீதமாக உள்ளது. இம்மாநிலத்திற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிராவுக்கு 46.47 லட்சம் டன் உணவு தானியங்கள் அளிக்கப்பட்டுள்ளன.*
*ஏழை, எளிய மக்களுக்கு ஒதுக்கப்படும் உணவு தானியங்கள் கடத்தப்படுவதை தடுக்கும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தும்படி மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளதாக கே.வி.தாமஸ் மேலும் கூறியுள்ளார்.*

## *சர்க்கரை உற்பத்தி 18.70 சதவீதம் உயர்வு*

*நடப்பு 2011–12 சர்க்கரை பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்), டிசம்பர் 15–ந் தேதி வரையிலான காலத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி 18.7 சதவீதம் அதிகரித்து 45.84 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்தில் 38.63 லட்சம் டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த தகவலை இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.*
*இந்த காலகட்டத்தில் 452 சர்க்கரை ஆலைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நிலையில், கடந்த ஆண்டின் இதே காலத்தில் 445 சர்க்கரை ஆலைகள் செயல்பாட்டில் இருந்ததாக கூறப்படுகிறது.*
*மஹாராஷ்டிர மாநில ஆலைகள் நடப்பு பருவத்தில் சற்று தாமதமாகவே செயல்பட துவங்கின என்றாலும் உற்பத்தியில் காணப்பட்டுள்ள இந்த உயர்வு மகிழ்ச்சி தரும் அம்சமாக உள்ளது.*
*இந்த காலகட்டத்தில், மஹாராஷ்டிர மாநிலத்தின் பங்கு கடந்த ஆண்டின் இதே காலத்திலான உற்பத்தியை விட 1.25 லட்சம் டன் அதிகரித்து 17.50 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.*
*அதே போல், உத்தர பிரதேச மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி 12.85 லட்சம் டன்னாக உயர்ந்து காணப்படுகிறது. இம்மாநிலம் கடந்த ஆண்டின் இதே காலத்தில் 8.55 லடசம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்திருந்தது.*
*கர்நாடக மாநிலத்தின் உற்பத்தியும் கடந்த ஆண்டின் இதே காலத்திலான உற்பத்தி அளவான 7.35 லட்சம் டன்னிலிருந்து 8.25 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.*